**மோதல்களால் பாதிக்கப்பட்ட பிராந்திய அவசர செயற்திட்டத்தின் (சீஏஆர்ஈ) (ஆக்கக்கூறு ஏ)- 2013**

---

மோதல்களால் பாதிக்கப்பட்ட பிராந்திய அவசர செயற்திட்டத்தின் (சீஏஆர்ஈ) (ஆக்கக்கூறு ஏ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 யூன் 07 ஆம் திகதிய 2626 எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 2 ஆம் பட்டோலையின் இன் II பீ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

கடன் உடன்படிக்கையின் படி, முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் தற்போதைய கொள்கை திட்டமிடல், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வட மாகாண சபையின் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் மாகாண நீர்ப்பாசன திணைக்களம் என்பன அமுலாக்கும் முகவர்களாக உள்ளனர். மோதல்களால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழ்வாதாரம், பொருளாதார உட்கட்டமைப்பு நிருவாக மற்றும் சட்டச் சேவைகளை மீளமைத்து முன்னேற்றுவது செயற்திட்டத்தின் குறிக்கோள்ளாகும், கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் ஆக்கக்கூறு ''ஏ'' யின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 74.49 மில்லியனானதுடன் அதில் ஐ.அ டொலர் 67.26 மில்லியன் அல்லது மொத்தக் கிரயத்தின் 89 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்க உடன்பாடு காணப்பட்டதுடன் ஐ.அ.டொலர் 7.23 மில்லியன் மீதித் தொகை அல்லது 11 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்க வேண்டும். செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை 2010 யூன் 07 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2013 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என பட்டியல்ப்படுத்தப்பட்டது.

## 1.3 செயற்திட்டத்தின் நடவடிக்கைகள்

---

கடன் உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் ஆக்கக் கூறு ''ஏ'' இன் நடவடிக்கைகளை கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பகுதி – 1 | கிளிநொச்சி மாவட்டத்தில் அண்ணளவாக 100 கி.மீ மாகாண வீதிகளின் புனரமைப்பு |
| பகுதி – 2 | வடமாகாணத்தில் அண்ணளவாக 100 கி.மீ மாநகர மற்றும் நகர வீதிகள் மற்றும் வட மத்திய மாகாணத்தின் அண்மையிலுள்ள கிராமங்களின் கிராமிய வீதிகளின் புனரமைப்பு |
| பகுதி – 3 | வடமாகாணத்தில் அண்ணளவாக 65 கி.மீ தேசிய வீதிகளின் (பீ வகை) புனரமைப்பு |

## 1.4 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழான பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் சொல்லப்பட்ட அளவீடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீளளிப்புக்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட புத்தகங்களிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத் தினத்தில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கஞ் செய்யப்பட்டனவா என்பதும்

(ஏ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்

**3. அபிப்பிரயாம்**

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும் இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிரவும்

(அ) செயற்திட்டம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதிய கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீளளிப்புக்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்றும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்தினத்தில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கஞ் செய்யப்பட்டுள்ளன என்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கேற்ப மீளளிப்பு விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ), மீது நியாயமான முறையில் நம்பிக்கை கொள்ளலாம் என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**4. நிதிக் கூற்றுக்கள்**

**4.1 நிதிசார் செயலாற்றல்**

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 3,500,649,589 ஆகும். மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செயற்திட்டத்தின் செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| செலவின விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 3,298,020,502 | 2,291,866,077 | 6,272,047,574 |
| உபகரணங்கள் | - | 19,982,886 | 55,555,219 |

| | | | |
|---|---|---|---|
| ஆலோசனை | 145,734,535 | 151,476,107 | 406,859,432 |
| உயரும் தொழிற்பாட்டுக் கிரயம் | 30,401,900 | 37,655,435 | 105,235,694 |
| கடப்பாட்டுக் கட்டணங்கள் | 26,492,652 | 23,905,610 | 66,824,774 |
| | 3,500,649,589 | 2,524,886,115 | 6,906,522,693 |

### 4.2 கட்டு நிதி நிதியக் கணக்கு

கணக்குகள் மற்றும் தரப்பட்ட தகவல்களின் படி, மீளாய்வாண்டில் விஷேட டொலர் கணக்கின் தொழிற்பாடுகள் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிலிருந்த மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| | ஐ.அ. டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 2,861,840 | 363,913,910 |
| கூட்டு : மீள் நிரம்பல்கள் | 92,432 | 11,778,267 |
| மீள்மதிப்பு இலாபம் | - | 2,387,110 |
| | 2,954,272 | 378,079,287 |
| கழி : பற்றுதல்கள் | 2,952,042 | 377,787,624 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 2,230 | 291,663 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 விளக்கமளிக்கப்படாத வித்தியாசம்

ரூபா 15,843,478 கூட்டுமொத்தத் தொகையான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறவேண்டிய மீதிகள் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புகளில் காட்டப்பட்ட ரூபா 6,665,458 ஆன நேரொத்த தொகையுடன் உடன்பட்டிருக்கவில்லை. வித்தியாசத்திற்கான காரணம் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

காலாண்டு மற்றும் அரையாண்டு ரீதியான முன்னேற்ற அறிக்கைகள் ஆலோசனையாளரால் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முழு செயற்திட்டக் காலத்தையும் உள்ளடக்கி மாதாந்த, காலாண்டு மற்றும் அரை ஆண்டு ரீதியான பொறுப்புக்களை நிர்ணயித்து நிதி மற்றும் பௌதீக ரீதியான இலக்குகளுடன் சகல செயற்திட்ட நடவடிக்கைகள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் என்பவற்றை உள்ளடக்கியதாக ஒரு முழுமையான நடவடிக்கை திட்டம், செயற்திட்ட காலத்திற்கிடையில் ஒதுக்கப்பட்ட நிதிகளைப் பயன்படுத்துவதன் மூலம் செயற்திட்ட குறிக்கோள்களை அடைவதை உறுதிப்படுத்துவதாகத் தயாரிக்கப்பட வேண்டும். எனினும் அத்தகைய திட்டம் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் செயற்திட்டத்தின் முன்னேற்றம் அடையவேண்டிய நோக்கங்களிற்காக சரியான அளவீடுகளை எடுப்பதற்கும் அவசியமான மாற்றங்களை செய்வதற்கும் ஒட்டுமொத்தமாக முறைப்படி மதிப்பாய்வு செய்ய முடியவில்லை.

(ஆ) செயற்திட்ட பிரேரணையின் பிரகாரம், 05 விடயங்களின் கீழ் செயற்திட்டத்தின் கூறு ஏ இற்காக ரூபா 8,648 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒதுக்கீட்டின் விரிவான பகுப்பாய்வு மற்றும் நிதிகளின் பயன்பாடு என்பன கீழே காட்டப்பட்டுள்ளது.

| **செலவின விடயம்** | **ஒதுக்கப்பட்ட தொகை** | **பயன்படுத்திய தொகை** | **பயன்படுத்தாத தொகை** |
|---|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| சிவில் வேலைகள் | 7,934 | 6,272 | 1,662 |
| உபகரணங்கள் | 70 | 56 | 14 |
| ஆலோசனை | 410 | 407 | 03 |
| ஊதிய உயர்வு | 161 | 105 | 56 |
| கட்டுப்பாட்டுக் கட்டணங்கள் | 73 | 67 | 06 |
| | 8,648 | 6,907 | 1,741 |

## 6.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தின் கூறு ஏ இன் நடவடிக்கைகள் தேசிய வீதிகளின் புனரமைப்பு, மாகாண வீதிகளின் புனரமைப்பு போன்ற இரண்டு உப கூறுகளின் பெயர்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. வட மாகாணத்தில் மாகாண வீதிகளின் புனரமைப்பிற்கு வழங்கப்பட்ட 33 ஒப்பந்தங்களில், தேசிய வீதிகளின் புனரமைப்பின் கீழ் வழங்கப்பட்ட சகல ஒப்பந்தங்கள் மற்றும் 31 ஒப்பந்தங்கள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. ஏனைய 02 ஒப்பந்த உடன்படிக்கைகள் ஒப்பந்தகாரரின் குறைவான செயலாற்றல் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. மாகாண வீதிகளை புனரமைப்பதற்கு செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வழமையாக, செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் கீழான வேலையின் நோக்கெல்லை மாற்றப்பட்டிருந்தது. வட மாகாணத்தில் மாகாண வீதிகளை புனரமைப்பதற்கு அமுலாக்கப்பட்ட 33 ஒப்பந்தங்களில் 06 ஒப்பந்தங்களின் ஆரம்ப கிரயம் ரூபா 123,572,237 ஆல் அதிகரித்திருந்த அதேநேரம் ஏனைய 27 ஒப்பந்தங்களின் கிரயம் வேலைகளின் நோக்கெல்லையின் முரண் காரணமாக ரூபா 87,720,855 ஆல் குறைவடைந்திருந்தது. ஆதலால், வீதி அளவைகள் மேற்கொள்ளல்,

அளவீட்டுப் பட்டியல் தயாரித்தல் போன்ற ஆரம்ப வேலைகளை முறைப்படி செய்யப்பட்டிருக்கவில்லை என்று குறிக்கின்றது.

(ஆ) மாந்தை – பரப்புக்கடந்தான் வீதியின் 11,850 மீற்றர் வீதி வேலைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டதில் 11,550 மீற்றர் வீதி வேலைகள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வேலைகள் கவனிக்கப்பட்டிருக்காமையை கருத்திற்கொள்ளாமல் ஒப்பந்தகாரருக்கு ரூபா 5,911,274 ஆன மொத்தக் கொடுப்பனவு விடுவிக்கப்பட்டிருந்தது.

(இ) ஒப்பந்தத்தின் பொது நிபந்தனையின் 4.9 ஆம் உட்பிரிவின் பிரகாரம், ஒப்பந்தகாரர் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் வீதி மற்றும் பாலங்களின் நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்புக்கான கைநூலில் குறிப்பிடப்பட்டவாறு தரக்காப்பீட்டு முறைமை பின்பற்றப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், குறைவான வெப்பநிலை மற்றும் ஈரமான மேற்பரப்புடைய காலநிலையின் கீழ் மலைக்கோட்டை வீதியில் அஸ்பற் இடலிற்காக தரக்காப்பீட்டை பின்பற்றல் மகாத்மகாந்தி வீதியின் மதிப்பீட்டு அடிப்படை மார்க்க அடுக்கு மட்டப்படுத்தலிற்காக பரீட்சிப்பு செய்யப்பட்டிருக்காமை மற்றும் அபுபக்கர் வீதியின் விளிம்பு அகலமாக்கல் நோக்கத்திற்காக பொருத்தமற்ற பொருட்களை பயன்படுத்தல் போன்ற பல குறைபாடுகள் கணக்காய்வாளரால் செய்யப்பட்ட களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஆலோசனை சேவை உடன்படிக்கையின் பிரகாரம், குறைபாட்டுப் பொறுப்பின் காலத்தின் போது குறைபாடுகளை திருத்துவதற்காக சேவைகள் வழங்குவதற்கு ஆலோசனையாளரிற்கு பொறுப்புள்ளது. எவ்வாறாயினும், உயிலங்குளம்- அத்திவெளி வீதி, குணுக்காய்- தெம்மியங்குளம் வீதி, மாந்தை – பரப்புக்கடந்தான வீதி மற்றும் கொக்காவில் முதல் துணுக்காய் வீதிக்கான குறுக்குப்பாதை என்பவற்றின் புனரமைப்புக்களில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட நிதிகளில் ஒப்பந்தகாரரால் ரூபா 15 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், அளவை உபகரணங்கள், கணனிகள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் போன்ற சொத்துக்கள் செயற்திட்டத்திற்கு உடமையான சொத்துக்களாக பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், இலாபம் மற்றும் மேந்தலை எல்லையின் 15 சதவீதமும் ஒப்பந்தகாரரால் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

**6.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஆலோசனை உடன்படிக்கையின் பிரகாரம், ஆலோசனையாளரால் கையாளப்பட்ட மூல ஆவணங்கள் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் செயற்திட்டத்திற்கு கையளிக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கப்பட்ட ஒப்பந்தங்ள் தொடர்பான தொடர்பு கோவைகள் மற்றும் ஆவணங்கள் செயற்திட்ட பணிப்பாளரால் வேண்டுதல் செய்திருந்த பேதிலும் ஆலோசனையாளரால் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்தத்தின் பொது நிபந்தனையின் 4.6.2 ஆம் உட்பிரிவின் பிரகாரம், பூர்த்தியாக்கல் திகதி நீடிக்கப்பட்டிருக்குமாயின் மாத்திரமே தீர்க்க வேண்டிய இழப்பீடுகள் திருப்பிச் செலுத்த முடியும். எவ்வாறாயினும், மாதந்தை – பரப்புக்கடந்தான் வீதியின் புனரமைப்பின் பூர்த்தியாக்கலிலுள்ள தாமதங்களில் அறவிடப்பட்டிருந்த ரூபா 27,332,509 தொகையான தாமதக்கட்டணங்களை பூர்த்தியாக்கல் திகதி நீடிக்கப்பட்டிருக்காத போதிலும் திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், கிளிநொச்சியில் முறுகண்டி – அக்கராயன்குளம் வீதியின் புனரமைப்பின் மீதான இறுதிப் பட்டியலிருந்து கழிக்கப்பட்ட

ரூபா 1,287,056 ஆன தீர்க்கப்படவேண்டிய இழப்பீடுகள் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருக்காமல் மீளளிக்கப்பட்டிருந்தது.

(இ) வவுனியா மற்றும் கிளிநொச்சியிலுள்ள மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான உத்தியோகபூர்வ விடுதிகள், போன்றவற்றிக்கான புதுப்பித்தல் வேலைகள் வீதிப் புனரமைப்பு வேலையின் நோக்கெல்லையில் உள்ளடக்கப்பட்டிருக்காத போதிலும் ரூபா 4.2 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தால் புதுப்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பெறுமதி சேர் வரி நோக்கத்திற்கான பதிவு இலக்கம் செல்லுபடியற்றிருந்த 05 ஒப்பந்தகாரர்களிற்கு ரூபா 208,425,950 தொகையான பெறுமதி சேர் வரிகள் செலுத்தப்பட்டிருந்தது என கணக்காய்வில் வெளிப்பட்டது.